மனுதாரர் (94)

அனுப்புநர்
திரு இரா.சு. மாரியப்பன், B.E., MBA.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தூத்துக்குடி மாவட்டம்,
51, மேலரதவீதி, தூத்துக்குடி – 2
தொலைபேசி 0461 2322651
மின்னஞ்சல் dtcpttkddistrict@gmail.com

பெறுநர்
செயல் அலுவலர்
எட்டையபுரம் பேரூராட்சி
தூத்துக்குடி மாவட்டம்

ந.க. எண் 2885/2021 தூமாஅ–2, நாள் 24.11.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052, கார்த்திகை 8

அய்யா,

பொருள் : மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – தூத்துக்குடி மாவட்டம் – எட்டையபுரம் வட்டம் – எட்டையபுரம் பேரூராட்சி – எட்டையபுரம் கிராமம் – சர்வே எண் 543/2E, 2F, 2M1–ல் 19000 சமீ (4.70 ஏக்கர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி – ஒப்புதல் வழங்குதல் – குறித்து

பார்வை :
1. மனுதாரர் திரு குன்னிமலைராஜா மற்றும் திரு சரவணன் கடிதம் நாள் 26.10.2021 / 15.11.2021 மற்றும் 22.11.2021
2. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 02.11.2021 மற்றும் 22.11.2021
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க. எண் 19799/2020 போ, நாள் 24.12.2020
4. அரசாணை எண் 138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 04.06.2004
5. அரசாணை எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 04.05.2017
6. இணை இயக்குநர், வேளாண்மைத்துறை கடிதம் ந.க. எண் தி3/9595/2021 நாள் 20.10.2021
7. அரசாணை எண் 18 மற்றும் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019 மற்றும் 31.01.2020
8. அரசாணை எண் 141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 23.09.2020

9. அரசாணை எண் 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 09.12.2020

10. அரசு கடிதம் எண் 19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 30.08.2017

11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண் 13686/2017 எல்ஏ1, நாள் 08.09.2017

12. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண் 4367/2019 பிஏ2, நாள் 14.10.2019

13. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண் 4367/2019 பிஏ2, நாள் 05.02.2020

--------

பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் வட்டம், எட்டையபுரம் பேரூராட்சி, எட்டையபுரம் கிராமம், சர்வே எண் 543/2E, 2F, 2M1-ல் 19000 சமீ (4.70 ஏக்கர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள் 02.11.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 1-ல் சுட்டிய 15.11.2021 நாளிட்ட மனுதாரர் கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திரம் எண் 2942/2021, 2945/2021, நாள் 15.11.2021-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தூத்துக்குடி - 2

24/11/21

நகல்

1. திரு குன்னிமலைராஜா மற்றும் திரு சரவணன்
த-பெ, வேலுச்சாமிசெட்டியார்,
107, பிள்ளையார் கோவில் தெரு,
தனுஸ்கோடியாபுரம், கோவில்பட்டி
— பத்தி ஒன்று மட்டும்

2. செயலாளர் (திட்டம்), தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் (TNRERA), 1ஏ, காந்தி இர்வின் பாலம் ரோடு முதல்தளம், எழும்பூர், சென்னை

3. இருப்பு கோப்பு (வரைபடம் 1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1)

## எட்டையபுரம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
### முன்னிலை : திரு.கு.கணேசன்

ந.க.எண். 334/2021/அ2

நாள்.29.11.2021

பொருள் : மனைப்பிரிவு – தூத்துக்குடி மாவட்டம் – எட்டையபுரம் தேர்வுநிலை பேரூராட்சி – எட்டையபுரம் கிராமம் சர்வே எண் 543/2E,2F,2M1 ல் 19000 ச.மீ (4.70 ஏக்கர்) பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்களுக்கு அனுமதி வழங்கியது – பத்திரம் பதிவு செய்ய தடையின்மை சான்று மற்றும் ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1) துணை இயக்குநர்(பொ), நகர் ஊரமைப்புத்துறை தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க.எண்.2885/2021/தூமா அ–2 நாள் 24.11.2021
2) தொடர்புடைய ஆவணங்கள்.

*********

பார்வையில் காணும் தூத்துக்குடி மாவட்ட நகர ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களின் கடிதத்தில் , எட்டையபுரம் பேரூராட்சி, எட்டையபுரம் கிராமம் சர்வே எண் 543/2E,2F,2M1 ல் 19000 ச.மீ (4.70 ஏக்கர்) பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ /தூமாஅ எண்.86/2021 ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள 1 முதல் 11 வரை உள்ள சாலைகள் மற்றும் உள்ளாட்சியின் பயன்பாட்டிற்கு 90.32 ச.மீ கொண்ட இடம் எட்டையபுரம் சார்பதிவாளர் அலுவலக பதிவு ஆவண எண்.2942/2021 மற்றும் 2945/2021 நாள்.15.11.2021ன்படி எட்டையபுரம் பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மனைப்பிரிவில் அமைந்துள்ள 80 மனைகளுக்கு கூராய்வு கட்டணம் மற்றும் நாளது தேதியில் மனையிடத்திற்கான சந்தை நில மதிப்பீட்டு தொகையில் 3 சதவீதம் கட்டணம் உட்பட தொகை ரூ.1,51,250/- ( ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்தொறாயிரத்து இருநூற்றி ஐம்பது மட்டும் ) எட்டையபுரம் கிளை கனரா வங்கி வரைவோலை எண்.630580 நாள்.29.11.2021 ன்படி எட்டையபுரம் பேரூராட்சி அலுவலக கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளது.

எனவே எட்டையபுரம் கிராமம் சர்வே எண் 543/2E,2F,2M1 ல் 19000 ச.மீ (4.70 ஏக்கர்) பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள 1 முதல் 80 வரையிலான 80 குடியிருப்பு மனைகளை பத்திரப்பதிவு செய்து கொள்ள தடையின்மை சான்று வழங்கப்படுவதுடன் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு 80 குடியிருப்பு மனைகளுக்கு இதன் மூலம் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1) தாங்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இவ்வுத்தரவு வழங்கப்படுகிறது. இதில் ஏதேனும் தவறுகள் / முறைகேடுகள் என பின்னர் தெரியவந்தால் இவ்வுத்தரவு முன்தேதியிட்டு இரத்து செய்யப்படும்.
2) இவ்வுத்திரவு மனை வரன்முறைபடுத்த மட்டுமே பொருந்தும், இம்மனையில் கட்டிடம் கட்டப்படும் நேர்வில் உரிய கட்டிட உரிமம்/அனுமதி பேரூராட்சியில் தனியே பெறப்படவேண்டும். மேலும் காலியிடவரி உரிய தேதியில் செலுத்தப்படவேண்டும்.
3) மனைப்பிரிவு/மனையிடம் முறைப்படுத்தியது சம்பந்தமாக நீதிமன்றத்தின் மூலம் தாவா வரப்பெற்றால் இந்த அலுவலகம் மூலம் கொடுக்கப்பட்ட அனைத்து உத்திரவுகளும் மற்றும் இரசீது ரத்தாகும்.
4) இந்த உத்திரவு மற்றும் செலுத்தப்பட்ட கட்டணங்கள் உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு உட்பட்டதாகும்.

5) விண்ணப்பதாரர் உண்மைக்கு புறம்பாக ஆவணங்களை இணைத்து முறைப்படுத்துதல் கட்டணம் செலுத்தியிருந்தால் இவ்வுத்திரவு பொருந்தாது.

6) இவ்வுத்திரவு குறித்து ஏதேனும் புகார் வரப்பெற்று தக்க ஆதாரங்களுடன் நிரூபணமானால் இந்த உத்திரவு மற்றும் செலுத்தப்பட்ட தொகை ரத்தாகும்.

7) அரசு ஆணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்.04.05.2017–ல் கண்டுள்ள நெறிமுறைக்கு உட்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் தவறுகள் / முறைகேடுகள் இருப்பின் உத்திரவு முன் தேதியிட்டு இரத்து செய்யப்படும்.

8) தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக துணை இயக்குநர் (பொ)அவர்களின் கடிதம் ந.க.எண்.2885/2021/தூமா அ–2 நாள் 24.11.2021ன் நிபந்தனைக்குட்பட்டது.

9) நீரோடைகள்/நீர்நிலைகள், ஆக்கிரமிப்பு, உயர்மின் அழுத்த மின் பாதைகளின் கீழ் மனைகள் அமைக்கப்பட்ட மனைக்கு இவ்வுத்திரவு பொருந்தாது.

10) பொது இடம், சாலைகள் ஆக்கிரமிப்பு இருப்பின் அவ்விடத்திற்கு இவ்வுத்தரவு பொருந்தாது.

11) மேற்படி மனைகள் 7 வது வார்டு வாவனராவுத்தர் தெரு 1 ல் இணைந்துள்ளது.

செயல் அலுவலர்
எட்டையாபுரம் பேரூராட்சி
தூத்துக்குடி மாவட்டம்

பெறுநர்

திரு.குன்னிமலைராஜா மற்றும்
திரு.சரவணன்,
த/பெ வேலுச்சாமி செட்டியார்,
107, பிள்ளையார் கோவில் தெரு,
தனுஸ்கோடியாபுரம்,
கோவில்பட்டி.

நகல்

1) துணை இயக்குநர் (பொ) அவர்கள், நகர் ஊரமைப்பு துறை, தூத்துக்குடி மாவட்டம்.
2) சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், எட்டையபுரம்.
3) உதவி இயக்குநர் அவர்கள், பேரூராட்சிகள், திருநெல்வேலி மண்டலம் , திருநெல்வேலி.
4) கோப்புக்கு.